1623

# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 06 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : |
|---|---|---|
| | சுட்டெண் : ........................................................................ | 2.00 மணித்தியாலம் |

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. கோபத்தின் உச்சிக்கே சென்றான் செல்வன். கோபம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
    1) சாந்தம் 2) மூர்க்கம்
    3) கவலை 4) துன்பம்

02. நீ எழுதிய மடல் கிடைத்தது. மடல் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
    1) கடிதம் 2) உடல்
    3) நட்பு 4) பாடல்

03. இரண்டாம் தவணைப் பரீட்சை ஆரம்பித்துவிட்டது. இங்கு ஆரம்பம் என்பதன் எதிர்ச்சொல்
    1) ஆக்குதல் 2) நுனி
    3) முடிவு 4) தொடக்கம்

04. கள்வனைக் கொல்லுதல் நீதி தானே? இங்கு நீதி என்பதன் எதிர்ப்பதம்
    1) அறம் 2) நேர்மை
    3) தர்மம் 4) அநீதி

05. கடுவன் என்பதன் பெண்பாற் சொல்
    1) பிணா 2) மந்தி
    3) அலவன் 4) போத்து

06. பல்லி சொல்லும் என்பது போல, மயில்
    1) கூறும் 2) பேசும்
    3) அகவும் 4) கீச்சிடும்

07. மீனின் இளையது குஞ்சு போல, தவளையின் இளையது
    1) குட்டி 2) பறள்
    3) பேத்தை 4) பிள்ளை

08. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள மொத்த எழுத்துக்கள்
    1) 18 2) 247
    3) 12 4) 216

09. பின்வருவனவற்றுள் மெல்லின எழுத்துக்கள் கொண்ட தொகுதி
    1) க் ச் ட் த் ப் ற் 2) ய் ர் ல் வ் ழ் ள்
    3) ங் ஞ் ண் ந் ம் ன் 4) க் ச் ய் ர் ல் ழ்

10. கேட்போனைச் சுட்டும் பெயர்
    1) தன்மை 2) முன்னிலை
    3) படர்க்கை 4) பன்மை


kalvi.lk

11. தம்பி படம் வரைந்தான். இவ் வாக்கியத்தின் செயப்படுபொருள்

1) தம்பி
2) வரைந்தான்
3) படம்
4) அவன்

12. நியூஸ் (NEWS) என்பதில் E என்ற எழுத்து குறிப்பது

1) வடக்கு
2) தெற்கு
3) கிழக்கு
4) மேற்கு

13. தென்னை மரக்கும்மியில் **"கொட்டாங்கச்சி"** என்பது

1) சிரட்டை
2) ஓலை
3) உணவு
4) பந்தல்

14. ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் காணப்படும் வாக்கியம்

1) கலப்பு வாக்கியம்
2) கூட்டு வாக்கியம்
3) தனி வாக்கியம்
4) கூற்று வாக்கியம்

15. **"அறம் செய விரும்பு"** என்றார் ஔவையார். இங்கு இடம்பெற்ற குறியீடு

1) முற்றுப்புள்ளி
2) வியப்புக்குறி
3) மேற்கோட்குறி
4) அடைப்புக்குறி

16. அறுபதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா

1) வைரவிழா
2) பவளவிழா
3) வெள்ளிவிழா
4) பொன் விழா

17. தேனீக்கள் வானமெங்கும் பறந்தன. இங்கு வந்த எழுவாய்

1) அவை
2) பறந்தன
3) தேனீக்கள்
4) வானமெங்கும்

18. நான் பாடம் படிக்கிறேன். படிக்கிறேன் என்பது

1) இறந்தகாலம்
2) நிகழ்காலம்
3) எதிர்காலம்
4) கடந்தகாலம்

19. கமலாவும் விமலாவும் ............................ போல ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

1) கீரியும் பாம்பும் போல
2) அடியற்ற மரம் போல
3) பசுமரத்தாணி போல
4) நகமும் சதையும் போல

20. அந்தப் பூக்கள் மிகவும் ...........................

1) அழகானது
2) அழகானவை
3) அழகு
4) அழகு மிகுந்தது

( $20 \times 1\frac{1}{2} = 30$ புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**01. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.**

1) இயற்கை வளங்களைப் பேணுவோம்.
2) கல்வியின் சிறப்பு
3) கடற்கரையில் ஒரு மாலை நேரம்.
4) ஒரு பழைய சப்பாத்து தன் கதை கூறல்.

( 20 புள்ளிகள்)

**02. விடுதியில் தங்கியிருக்கும் ஒரு மாணவராக உம்மைக் கருதி கற்றலுக்குத் தேவையான பொருட்களைக் கேட்டு, 75 சொற்களில் அமையுமாறு தந்தைக்கு ஒரு கடிதம் எழுதுக.**

( 15 புள்ளிகள்)

**03. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) மூட ஆமை என்னும் பாடலைப் பாடியவர் யார்?
2) தென்னை மரத்தின் பயன்கள் மூன்று தருக.
3) பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவியின் பெயர் யாது?
4) **"கொல்லையில் கிடைத்தது, கொல்லையில் கிடைத்தது"** என்பதில் வரும் கொல்லை என்பது யாது?
5) மோவாஸ் பறவையின் முட்டை ஓடு எதற்குப் பயன்படுகிறது?

( 5 × 3 = 15 புள்ளிகள்)

**04. பின்வரும் பாடலைக் கிரகித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

தாயென அன்பு செய்து
தந்தை போல் பரிந்து சொந்தச்
சேயென அணைத்துப் பேசிச்
செவ்விய அறிவு கூறித்
தூய நன்னடத்தை கற்கத்
துணையென நடந்து காட்டும்
ஆய நற்குணமும் உளோனே
ஆசான் என் றழைக்கத் தக்கோன்.

1) இப்பாடலில் தாயைப் போல் அன்பு செய்பவர் யார் எனக் குறிப்பிடப்படுகின்றது?
2) இப்பாடலில் காணப்படும் உவமைத் தொடர்கள் இரண்டு தருக?
3) எதனைக் கற்பதற்கு துணையாக நடந்து காட்டுவதாக கவிஞர் குறிப்பிடுகின்றார்?
4) இப்பாடலில் குறிப்பிடப்படும் ஆசானுக்குரிய பண்புகள் இரண்டு தருக.
5) பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.
   1) ஆசான்   2) சேய்

( 5 × 2 = 10 புள்ளிகள்)

**05. 1) பின்வரும் பந்தியில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

பரவைகள் வாணத்தில் எந்தவித கவளையுமின்றிப் பரந்து திறிவதைப் போல சன்தோசமாய் நாடகத்தை நடிப்போம். (06 புள்ளிகள்)

**2) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.**

1) வெல்லம்   2) குளம்   3) அடிசில்   4) பேராசை   (04 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# GRADE 6,7,8

# STUDY WITH US..! MATHS ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**
850/= Monthly

**ENGLISH MEDIUM**
1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page